## துக்கம் மற்றும் இன்னல்களைப் போக்குதவற்கான துஆ

*ஹஜ்ரத் அபூ பக்ர் (ர) அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்கள் இன்னல் களில் சிக்கித் தவிப்பவர்கள் இந்த துஆவை ஓதவேண்டும் என்று கூறி யதாக அறிவிக்கிறார்கள்.*

**اللَّهُمَّ رَحْمَتَكَ أَرْجُو، فَلاَ تَكِلْنِي إِلَى نَفْسِي طَرْفَةَ عَيْنٍ، وَأَصْلِحْ لِي شَأْنِي كُلَّهُ، لاَ إِلٰهَ إِلاَّ أَنْتَ**

*பொருள்: எங்கள் இறைவனே, நான் உன்னுடைய கருணையையே நாடியிருக்கின்றேன், என்னை ஒரு கணமும் என்னிடமே ஒப்படைத்து விடாதே, என்னுடைய விவகாரங்கள் அனைத்துமே சீராக்கி வைப்பா யாக. உன்னைத்தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை. (அபூ தாவூத்).*

*ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ர) அவர்கள் அறிவிக்கிறார் கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் இன்னல் எதிர்கொள்ளும்போது இந்த துஆவை ஓதுவார்கள்:*

**لاَ إِلٰهَ إِلاَّ اللّٰهُ العَظِيْمُ الحَلِيمُ، لاَ إِلٰهَ إِلاَّ اللّٰهُ رَبُّ العَرْشِ العَظِيمِ، لاَ إِلٰهَ إِلاَّ اللّٰهُ رَبُّ السَّمٰوَاتِ وَالأَرْضِ وَرَبُّ العَرْشِ الكَرِيمِ**

*பொருள்: கருணையும் மகிமையும் மிக்க வல்ல அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரியவன்யாருமில்லை. வணக்கத்திற்குரியவன்அல்லாஹ் வைத்தவிர யாரும் இல்லை, அவனே, மகிமைவாய்ந்த அர்ஷின் அதிபதியாகவும் இருக்கின்றான். வானங்கள் பூமியின் இரட்சகனும், மேன்மைமிக்க அரஷின் அதிபதியுமான அல்லாஹ்வைத்தவிர வணக் கத்திற்குரியவன் யாருமில்லை. (புக்ஹாரி, முஸ்லிம்).*

*ஹஜ்ரத் அஸ்மா பின்த் ௦ஃஉமைஸ் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் என்னிடம் கூறினார்கள், நான் உமக்கு பிரார்த்தனைக்கான சில சொற்களைக் கற்றுத்தருகின்றேன், உமக்கு இன்னல்கள் ஏற்படும்போது அவற்றை ஓதிக்கொள்ளும்:*

**أَللّٰهُ ، أَللّٰهُ رَبِّي لاَ أُشْرِكُ بِهِ شَيْئًا**

*பொருள்: அல்லாஹ், அல்லாஹ் மட்டுமே என்னுடைய இரட்சகன், நான் அவனுடன் யாரையும் இணை வைப்பதில்லை (அபூ தாவூத்).*

* * *

www.uzalfalahi.com